
உ

சிவமயம்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும்,

ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். குலசேகரம்பிள்ளை யோகநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

01 . 10 . 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும்,
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# குலசேகரம்பிள்ளை யோகநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# - நினைவு மலர் -

01. 10. 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தினருக்கு

ஒரு முன்னுதாரணமாகவும்

நல்ல வழிகாட்டியாகவும் இருந்து

நீங்கள் ஆற்றிய சேவை

எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்

எங்கள் இதயத்தை விட்டகலாது

இதற்கென்று ஒரு சமர்ப்பணம் அல்ல

ஓராயிரம் சமர்ப்பணங்களை

உங்கள் பாதங்களில்

எமது கண்ணீர்ப் பூக்களால்

சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!


அன்புடன்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர். குலசேகரம்பிள்ளை யோகநாதன்

## (தம்பி)

அன்னையின்
அன்பு மடியில்
28.01.1952

ஆண்டவனின்
அவசர அழைப்பில்
01.09.2014

## திதி வெண்பா

பாரில் ஜய ஆண்டின் ஆவணியாம் திங்களது
பூர்வ பட்ச சப்தமி திதியிலே - கீர்த்தி மிகு
குலசேகரம்பிள்ளை பெற் றெடுத்த செம்மல் யோகநாதன்
பார் நீங்கி சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே

(சம்பந்தர்)

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினை சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரம் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரம் உலகும் கழறஉழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாழ்சற் - குரவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குனனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமரர். குலசேகரம்பிள்ளை யோகநாதன் அவர்களின்

# வாழ்க்கை வரலாற் றுச் சுருக்கம்...

அமரர் யோகநாதன் அவர்கள், கற்கண்டு குலசேகரம்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனாக 1952ம் ஆண்டு மார்கழி மாதம் 28ம் திகதி யாழ் பண்ணாகம் பதியில் பிறந்தார். இவரது தந்தையார் குலசேகரம்பிள்ளை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் (அப்போதிக்கரி) மருத்துவத்துறையில் பணியாற்றினார். பணியாற்றும் காலங்களில் மிகுந்த பெயருடனும், புகழுடனும் இருந்தார்.

அமரர் யோகநாதன் உடன் பிறந்தவர்கள் இராசகுமாரி, சந்திரவதி, சற்குணதேவி, வசந்தமலர், ருக்மணிதேவி, போகேந்திராதேவி, ஜெகநாதன் ஆகியோருடன் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டு வாழ்ந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை தனது வீட்டின் அருகில் உள்ள பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கற்று வந்தார். அக்காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் அப்பாடசாலையில் மிகுந்த திறமைச்சித்தி பெற்றபடியால் இவரை கல்வித் திணைக்களகத்தினர் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் (Stanly College) உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இதனால் இவர் மிகச் சிறந்த நல் மாணவனாகப் பெயர் பெற்றார். 1969ம் ஆண்டு தனது கல்வியை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க தொழிற்துறைகளை விரும்பாது தனது பேரனார் ஆற்றி வந்த விவசாயத் தொழிலை விரும்பி மேற்கொண்டார்.

பண்ணாகம் ஊரிலே வெற்றிலை உற்பத்தியில் இவரது குடும்பம் சிறந்து விளங்கியது. இவரிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வேலை செய்வார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இலவசமாகவே வழங்கி அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு சந்தோஷப்படுவார்.

இதே போன்று ஊரின் வளர்ச்சி கருதி ஊரிலுள்ள பொது அமைப்புக்களில் முக்கிய பதவிகள் வகித்து சிறந்த தொண்டாற்றினார். இவரது சிறந்த சேவையை பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூகசேவா வாலிபர் சங்கம் பல வருடங்கள் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் அதிகம் பேசுவதை விரும்பாது செயல்களிலே திறமையைக் காட்டுபவர். இதனால் இவரை பெரியோர் முதல் சிறியோர் வரை மிகவும் மதிப்பு மரியாதையுடன் மதித்து நடப்பார்கள்.

இவர் தனது சுற்றத்தாரை தனது உயிரிலும் மேலாக மதிப்பவர். அவர்களின் இன்ப துன்பங்களில் தானாகவே முன் சென்று பங்கெடுக்கும் பண்பு கொண்டவர். இதனால் சுற்றத்தார். அனைவரும் "தம்பி, தம்பி" என்று அழைப்பார்கள் சிறியவர்கள் இவரை மரியாதையுடன் "தம்பி அண்ணை" என்றே அழைப்பார்கள்.

இப்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் இவர் உயிருக்குயிராக நேசித்த இவரது தந்தையார் 1979 ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 68வது வயதில் சிவபதமடைந்தார். இது அன்னாருக்கு பேரிழப்பாகும். இதனால் இவர் மூத்த மைந்தன் என்ற முறையில் தனது குடும்பப் பொறுப்புக்களைத் தாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இவரது குடும்பத்தைத் தனது திறமையால் ஓரளவு காப்பாற்றி வந்தாலும், தனது சகோதரிகளை கரையேற்ற வேண்டிய சூழ்நிலை காரணமாகவும், நாட்டின் அசாதாரண நிலைகாரணமாகவும் 1987ஆம் ஆண்டு "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பதற்கிணங்க வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டு ஜேர்மனியை அடைந்தார்.

இவர் ஜேர்மனி நாட்டில் லூடன்சையிட் (ludenscheid) நகரத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் பண்ணாகத்தைச் சேர்ந்த ஊர் இளைஞர்கள் ஜேர்மனியில் வந்த போது அவர்களை தனது இல்லம் அழைத்து வந்து உபசரிப்பார். பின்பு அவர்கள் தமக்கென உரிய இடம் செல்லும் வரை அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுத்து ஊர்மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றார். இதனால் வெளிநாட்டில் வாழும் ஊர்மக்கள் இவரைப் பெரிதும் மதிப்புடன் "தம்பி அண்ணை" என்று அழைப்பார்கள். இவர் ஜேர்மனியில் உலோகத் தொழிற்சாலை ஒன்றில் நிரந்தரத் தொழிலாளராக தொழில் புரிந்தார்.

அமரர் அவர்களின் தந்தையாரின் தலைமையில் மூத்த மூன்று சகோதரிகளுக்கும் திருமணத்தைச் செய்து வைத்தார். தந்தையாரின் பின் இவர் தனது இளைய சகோதரிகளையும் ஆசைத்தம்பியையும் வெளிநாட்டிற்கு அழைத்து நல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் துணைகளைத் தேடிக் கொடுத்து சிறப்பான வாழ்வை அமைத்துக் கொடுத்து அகம் மகிழ்ந்தார்.

அது மட்டும் அல்லாமல் மருமக்கள் பெறாமக்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து வாழ்ந்து வந்த காலத்தில் தனது சகோதரிகளினதும் தாயாரினதும் அன்புக் கட்டளையை ஏற்றுத் தனது தவ வாழ்வைத் துறந்து திருமணவாழ்வில் இணைய இணக்கங்கொண்டார். அதன் பயனாக 1995 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாவடியைச் சேர்ந்த பிரபல பாடசாலை அதிபராக இருந்த காலஞ்சென்ற திரு கைலாயநாதன் இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புத்திரியான கலாவாணி (வட்டுக்கோட்டைத் தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகர்) அவர்களை தனது வாழ்க்கைத் துணையாக பெற்றுக்கொண்டார். இவர் 1996ஆம் ஆண்டு தனது மனைவியை ஜேர்மனிக்கு அழைத்து இல்லற வாழ்க்கையை இன்பமாக மேற்கொண்டார். இவரது மனைவியின் சகோதரரான திரு.இளங்கோ அவர்கள் இவரின் சிறப்பான வாழ்க்கைக்கு மிகவும் பக்க பலமாக இருந்தார்.

இவர் வாழ்ந்த ஜேர்மனி நகரத்தில் அந்த நகரமக்களால் இவரையும் இவர் மனைவியையும் தங்கள் குடும்பத்தினர் போன்றே இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு மிகுந்த பாசமுடன் பழகி வருவார்கள். யார் உதவி என வந்தாலும் மறுக்காமல் உதவி செய்யும் பண்பு அமரரை மேலும் ஒரு படி மக்கள் மத்தியில் உயர்த்தியது.

இவர் 01.09.2014 அன்று இயல்பாகவே தனது காலைக்கடன்களை முடித்து தனது குடும்ப வைத்தியரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் பரிசோதனைக்காக சென்றிருந்தார். அங்கு எதிர்பாராத விதமாக அவருக்கு ஏற்பட்ட உடல் நலத் தாக்கத்தால் சிவபதமடைந்தார்.

அன்னாரின் ஆத்மா என்றும் விசவத்தனை வேலவன் பாதார விந்தங்களில் நித்தியபேற்றினைப் பெற இறைவனை பிரார்த்திப்போமாக. அந்த உத்தம மனித நேய மனிதனின் மரணம் அவர் அன்னைக்கும், உறவினருக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவோமாக.

***"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது"***

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் தனது தாய் சகோதரர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரும் அன்னையின் புலம்பல்

எண்ணினன் கோடி இழப்பை அறியாமலே!
நான் பெற்ற அன்புச் செல்வமே!
இப்படி கடவுள் மறைப்பார் என எண்ணினேனோ?
தீயில் மாழும் வரை தீராது என் கவலை.....
நான் மண்ணில் மாழும் வரை மட்டும்
மாறாத கவலையை தந்தாயே கடவுளே.....
அப்பு இப்படி நடக்கும் என நினைத்தேனோ!
என் உள்ளமே கல்லாகி போனதே!
தாய் மகனுக்கு எழுத வேண்டிய தேவை
வந்து விட்டதே கடவுளே!
சொல்லி அழுதாலும் தீராத துயரம்......
இனி நான் எங்கு தான் சென்று தேடுவேன்
என் அருமருந்தை என் கடவுளை......
தொலைபேசியில் எடுத்து, அம்மா கடவுள் எப்படி இருக்குறீங்க?
மருந்து சாப்பிட்டீங்களா? என்றெல்லாம்
அன்பாக கேட்பாயே ஐயா!
தலையில் இடி வந்து விழுந்தது போல்
உன் செய்தி கேட்டு உறைந்து விட்டேன்..........
என்னால் நம்பவே முடியவில்லையே
அப்பு கடவுளே உன்னை எப்ப வந்து பார்ப்பேன்
என காத்துக் கொண்டிருக்கின்றேன்

**உன் பிரிவால் வாடும்**
அம்மா
கு.பாக்கியம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

என் துணைவர் இருக்க எனக் கென்ன குறை என்றேன்
கல்மனம் படைத்த காலனவன் உம் உயிரை ஏன் எடுத்தான்
பண்புமிகு கணவரினை பாதிவழி பிரிந்ததினால்
தங்குபுகழ் தரணியிலே தனியே இருந்து வாடுகின்றேன்
நம்பமுடியவில்லை உம்பிரிவை
ஏற்க மறுத்ததுவே என் இதயம்
கனவா நனவா ஜீரணிக்க முடியவில்லை
கைப்பிடித்தநாள் முதல் கண்கலங்காது காத்தவரே
இன்று செல்வது நியாயம் தானோ
நீங்கள் என்னை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்
நெஞ்சைவிட்டு அகலாது
எப்பிறப்பில் இனிக் காண்பேன்
எனையேனோ விட்டுச் சென்றீர்

**உங்கள் அன்பு மனைவி கலா**

## அக்காவின் புலம்பல்

எங்கள் அன்புத்தம்பி உனது மறைவு
எங்களால் தாங்க முடியாமல் துடித்தோம்
கூடிப்பிறக்க கோடி தவம் செய்ய வேண்டும்
உன் அன்பை எப்படி வெளிப்படுத்துவோம்
நினைக்க நினைக்க நெஞ்சமே வெடிக்கிறதே
கண்ணீர்தான் கரியாகி விட்டது
தம்பியை நினைக்க தாங்கமுடியாத வேதனை
எவ்வளவு ஒற்றுமையாக இருந்தீர்கள்
எனது மகள்களையும் கண்டிப்பாகவும் அன்பாகவும் வளர்த்தீர்கள்
எப்படித்தான் மனம் வந்ததையா
தம்பி கோபம் வந்தாலும் உடனே காட்டுவாய்
அக்கா அக்கா என அன்பாக உரிமையாய் கூப்பிடுவாய்
இனி யார் ஐயா எங்களுக்கு?
உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

**உன்பிரிவால் வாடும் சகோதரி**

**த.இிராசகுமாரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தெய்வமே அண்ணா

அன்பின் திருவுருவே அண்ணா
உங்கள் உருவந்தனை எப்படி மறக்கமுடியும்
அழகொழிக்கும் அன்பு முகம் எங்கே
புன்னகை பூத்த புன்சிரிப்பு எங்கே
நேரிய அழகுப்பார்வை எங்கே
நீள் சுருள் முடி அழகு எங்கே
அழகு குறையா ஆடை அணிந்த மேனி எங்கே
அனைவரையும் அன்போடு அணைத்த கரம் எங்கே
எல்லோரையும் அரவணைத்து ஆறுதல் கூறும் வார்த்தை எங்கே
பணத்தை தேடி அலையும் உலகில்
பாசத்தைக்காட்டி உறவுகளை இணைத்தீர்கள்
மெழுகுபோல் வெளிச்சம் காட்டி நீங்கள்
அணைந்து போனது ஏன்
என் கணவர் இறந்தபின் நீங்கள்
ஆதரவாக இருந்தீர்கள்
அது பொறுக்க முடியாமல் கொடிய காலன்
உங்களை பிரித்துசென்றுவிட்டான்
மாறுகின்ற உலகினிலே மறுபடியும் வந்திடுவீரென
காத்திருக்கின்றோம் வருவீர்களா?
அண்ணா என் உடன் பிறப்பே
உங்கள் பிரிவு எங்களுக்கு வெந்தபுண்ணில்
வேல் பாய்ச்சியது போல
இழப்புக்கு மேல் இழப்பாக தாங்க
இயலாதநிலை - எனினும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
விசவத்தனை வேலவன்
துணையை வேண்டுகிறேன்

**உங்கள் பிரிவால் துயருறும் தங்கை**
**திரவியம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தங்கையின் கவலை

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்***
***வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*** (திருக்குறள்)

என் அன்பு அண்ணாவே
உங்களைவிட்டால் நான் யாரை
அண்ணா என கூப்பிடுவேன்
கடவுளே சதி செய்து விட்டாயா?
அண்ணா என சொல்லி முன்னிருத்திக்
கதைகள் எல்லாம் கூறிக் கொள்வேன்
காத்திருந்து காலனவன் பறித்துச் சென்றான்
கரைகாணாத் துயரமதில் துவள்கின்றேனே
நேற்று இருந்தார் இன்று இல்லை
இன்று நிஜவுலகில் வாழ்வதும்
அமைந்தாலே தேற்றிடுவார்
இல்லாது தவிக்கின்றேனே
திரும்பி வர வழியில்லை
இனி என்ன செய்வேன் அண்ணா! கடவுளே!

**கண்ணீர்ப் பூக்கள் தூவியபடி**

**அன்புத்தங்கை தேவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன் ஒரு கோயில்

அன்பும் பாசமும் மிக்க அண்ணா! நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும் எங்கள் நினைவை விட்டுப் போகமாட்டீர்கள். நீங்கள் சுகமாக இறைவனை நாடி சென்றுவிட்டீர்கள். ஆனால் உங்கள் பாசத்திற்கும், அன்பிற்கும் அடிமையான நாங்கள் இங்கே அழுது தவிக்கின்றோம். இப்படி ஒரு அண்ணனை நாங்கள் எங்கே காண்போம். இனியும் ஒரு பிறவி இருந்தால் மீண்டும் உங்களுக்குத் தங்கையாகவே பிறவி எடுப்பேன். தனக்கென வாழாது எங்களுக்காக வாழ்ந்த கடவுள் நீங்கள். சின்னவயதில் என்னை பகிடி பண்ணி அழவைப்பீர்கள். இப்பொழுது பகிடி கதைகள் சொல்லி சிரிக்க வைப்பீர்கள் இதையெல்லாம் எங்கே காண்பேன் எல்லோரையும் விட என்னோடும் பிள்ளைகளோடும் வாழ்ந்தகாலம் பழகிய காலம் கூடியது. அதை நினைத்தே நான் ஆறுதல் அடைகின்றேன். நீங்கள் எப்போது வீட்டுக்கு வருவீர்கள் நாங்கள் இனி எப்போது உங்களைக் காண்போம். எங்களை உங்கள் பிள்ளைகள் போல வளர்த்தீர்கள். உங்களை இப்படி இளம் வயதில் இழந்து நிற்போம் என்று நினைக்கவே இல்லை. கடவுளே உனக்கு கண்ணில்லையா? ஒன்றாகப் பிறந்து வளர்ந்து சேர்ந்து கதைத்து மகிழ்ந்தோம். தாய்க்கு ஒரு தலைமகனாகப் பிறந்து செல்லப்பிள்ளையாக வாழ்ந்து எங்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த ஒரு கடவுள். எங்களை ஒரு நாளும் கோவித்துப் பேசியதும் இல்லை அவரின் கண்ணுக்கு நாங்கள் சிறுபிள்ளைதான். நான் A/L படிக்க தொடங்கும் போது எனக்காக ஒரு மேசைவிளக்கும் பேனாவும் வாங்கித் தந்தது இப்பவும் எனது ஞாபகத்தை விட்டு அகலாமல் இருக்கின்றது.

அன்பும் பாசமும் நிறைந்த பாசமுள்ள அண்ணாவே, நீங்கள் ஒரு கோயில். குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்வுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி எப்பொழுதும் முகம் பார்த்துக் கரமிரண்டால் உமைத்தழுவி முப்பொழுதும் எம் நினைவாய் முகம் முழுதும் எம் திசையாய் தப்பேதும் இல்லாமல் தரணி போற்ற வாழ்ந்த அண்ணாவின் திருமுகத்தை நாம் எப்போது பார்ப்போம். தாங்க முடியவில்லை அண்ணா தவித்து நான் துடிக்கின்றேன் அண்ணா என்றழைக்க இனி யார் அண்ணா குரல் தருவார். மீளாத்துயில் கொண்டு எமைவிட்டு ஏன் தான் போனீரோ? ஆறாத்துயரில் நாம் தவிக்க ஆண்டவர் அடி சேர்ந்தீரோ? அணையா விளக்காக ஒளி தந்த எமது தெய்வம் விண்ணுக்கு எய்தினாலும் மண்ணுலகில் துருவநட்சத்திரமாய் நின்று மின்னும் தங்கள் திருவடிகளை வணங்கி நிற்போம்.

***அண்ணன் ஒரு கோயில் என்றால் அது எங்கள் அண்ணன் தான்***

**அன்புத்தங்கை**
**மலர், லிங்கம்**

## அண்ணாவே எங்கள் குலவிளக்கே

பாசத்திற்குரிய அண்ணாவே, எங்கள் குலவிளக்கே. அன்பான பேச்சின் உடன் பிறப்பே அழகான சிரிப்பின் சொந்தக்காரனே. நகைச்சுவையாக பட்டப்பெயர் சொல்லி மகிழவைக்கும் உறைவிடமே. முத்தான உறவாய் முழுதான பாசமாய் முழுவதும் எண்ணி நின்றோம். அத்தனை எண்ணமும் சுக்குநூறாகி விட்டதே அண்ணா. குழந்தை உள்ளம் கொண்டவரே வாழ்வில் இனி எப்போ காண்போம் அண்ணா? ஆனால் உங்கள் நினைவுகள் என்றும் அழியாது செல்வமாய் எங்கள் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். எங்களின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சோகத்தை எகிறிடும் துன்பத்தை யாராலும் நிரப்ப முடியாது. உங்களின் உயிர் பிரிந்ததென்ன மெய்யா? பொய்யா? நம்ப மனம் மறக்குதண்ணா. உங்கள் பிரிவைத் தாங்க முடியாது தவிக்கின்றோம். தங்கத்தை உரசினால் குறையிருக்கும், ஆனால் எங்கள் அண்ணா என்றென்றும் குறைவில்லாத்தங்கம். இப்பூமியில் பிறப்பெடுத்து தப்பில்லா வாழ்வதனை வாழ்ந்து தர்மத்தின் வழிதனிலே நடந்து ஒப்பில்லா இறைவனே இறங்கிவந்து உங்களிற்காக பொன்னுலகம் காட்டிநிற்பான்.

என்ன பெரியம்மான் கடவுள் கூப்பிட்ட உடனே எங்கள் எல்லோரையும் விட்டுப் போய் விடுவீங்களோ? இது என்ன நியாயம் எப்போதும் எல்லோருக்குமாக இருப்பீர்களே, இப்ப உங்களைப் பார்க்க என் கண்கள் ஏங்கும் போது, உங்கள் குரல் கேட்க செவிமடுக்கும் போது உங்களின் பாசத்திற்காக மனம் தவிக்கும் போது நீங்கள் ஏன் வரவில்லை. இனி உங்களைப் போல ஒரு அம்மான், ஒரு அப்பா, ஒரு வழிகாட்டி எல்லாவற்றிற்கும் மேலே ஒரு கடவுளை நான் எப்போ காண்பேன். என் கண்ணீரும் என் பாசமும் கடவுளோட மனதை மாத்தியிருந்தால் இப்போ நான் இந்த வார்த்தைகளை உங்களிடம் உங்கள் கண்களைப் பார்த்து சொல்லியிருப்பேன். ஆனால் கடவுள் எனக்கு அந்த சந்தோஷத்தை தராமல் யாருக்கும் சொல்லாமல் உங்களை கூட்டிக் கொண்டு போய்விட்டார். உங்கள் இதயம் எப்போ துடிப்பை நிறுத்தியதோ அப்போ கடவுள் என் மனசை சுக்குநூறாக நொறுக்கினார். எப்போ உங்களின் இருகண்கள் மூடினதோ அப்ப எங்கள் கண்களில் கண்ணீர். ஆனால் ஒரு விடயம் மட்டும் எனக்கு அந்தக் கடவுள் புரியவைத்து விட்டார். நீங்கள் எப்பவும் என்னை விட்டுத்தூரமாக போக முடியாது. ஏனென்றால் நீங்கள் குடியிருப்பது என் மனதில் எப்படி என்றாலும் நீங்கள் எங்களிடம் திரும்பி வருவீர்கள் என்ற நம்பிக்கையோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் உங்கள் சாலக்காரி சகானா. வேலைக்காரி வேலைக்காரி என்று அழைத்து என்னுடன் பகிடி விட்டவர் அவர் கூப்பிடுவது போல யாராலும் கூப்பிடமுடியாது. வேலைக்காரி என்ற சொல்லுக்கு அர்த்தமே மாற்றிவிட்டார். ஆனால் இனி வேலைக்காரி என்று யார் அழைக்க இருக்காங்க உங்களின் வேலைக்காரி கௌஷிகா.

**உங்களின் இழப்பால் துயருறும்**
**தங்கை மணி, மச்சான் பவன் குடும்பம்**
**Denmark**


## எனது தங்கமான அன்பு அண்ணன் எங்கே

எனதருமை அண்ணன் இறந்த செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைந்தேன். என்செய்வது என்று தெரியாமல் தவித்தேன். உங்களின் கள்ளங்கபடம் அற்ற அன்பு, பாசம், பரிவு இனி யாரிடம் கிடைக்கும் எங்களுக்கு இருந்த ஒரேயொரு அருமை அண்ணன் நீங்கள்தான்.

உங்களை இனி எங்கே காண்போம். இனி யாரை பாசமுடன் அண்ணன் என்று கூப்பிடுவோம். அப்பாவிற்கு செல்லப் பிள்ளையாக இருந்தீர்கள். அப்பா இறந்தபின் அப்பா ஸ்தானத்திலிருந்து எமக்கு நல் வழிகாட்டினீர்கள்.

எங்கள் எல்லோருக்கும் மனதிற்கு பிடித்த வாழ்க்கையை அமைத்துக்கொடுத்தீர்கள். எங்கள் சந்தோஷமே உங்கள் சந்தோஷமாக நினைத்தீர்கள். உம் ஒவ்வொரு செயல்களை நினைக்கும் போது கவலைதான் வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் தனது தம்பியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை கண்டவுடன் முகமலர்வோடு கட்டி அணைப்பீர். அணைத்து அன்பைப் பொழிவீர். எனது கணவரைக் காணாவிட்டால் அன்பான வார்த்தையால் "எங்கே குண்டன்" என்று செல்லமாகக் கேட்டு புன்னகைப்பீர்கள். அந்த புன்னகையை எங்கே காண்போம். அம்மாவிற்கு ஒரு நல்ல மகனாகவும், மனைவிக்கு அன்பான கணவனாகவும், எங்களிற்கு அன்பான நல்ல சகோதரனாகவும், மச்சான்மாரிற்கு நல்ல நண்பனாகவும், மருமக்களிற்கு நல்ல மாமனாகவும், தம்பியின் பிள்ளைகளிற்கு அன்பான பெரியப்பாவாகவும் இருந்தீர்கள்.

இப்படியான ஒரு மனிதரை இனி எங்கு காண்போம்
இந்த தங்கமானவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

உங்கள் இழப்பை எண்ணித் தவிக்கும்
**தங்கை கண்ணன், மச்சான் கெங்கா**

## அழுகையில் ஆறுமோ

உற்ற எம் உடன் பிறப்பே
 உயிர்த்துணையாய் இருந்தாய் நீயே
உயிர் பிரிந்த நாள் முதல்
 என் கண்கள் கண்ணீரால் நிறைகிறது
மறைந்திடுவாயென கனவிலும் எண்ணவில்லை
 விரைந்து நீ சென்றிட்ட மாயமென்ன அண்ணா?
நலம் பெற்று இருந்த நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணமுற்றுப் போனதால்
பித்தாகிப் போனேன் நான் இங்கு, அண்ணா!
ஒன்றாய் ஓர் வயிற்றில் பிறந்தோம்
ஓர் பானையில் வெந்ததை
உண்டு மகிழ்ந்தோம், அண்ணா!
ஓர் பாயில் ஒன்றாய் படுத்துறங்கினோம், அண்ணா
கற்ற கல்வி தனில் சிறப்புற்றாய்
பெற்ற அன்னை தவியாய்த் தவித்திட
புலம்பெயர் தேசத்தைத் தேடிய உறவுகள்
உற்ற உன் உயிர்த்துணை மனையாள்
எந்நாளும் அன்பை சொரிந்த பிள்ளைகள்
தனக்காக வாழாது எங்களுக்காக
வாழ்ந்த என் அண்ணா
இத்தனையும் ஏங்கித் தவியாய் தவித்திட
தனியுலகம் செல்லத் துணிந்ததென்ன

சகோதரன்
**தம்பி**

## அன்பின் திருவுருவம் என் அம்மான்

***"பண்பின் பிறப்பிடமே***
***பாசத்தின் பொக்கிஷமே***
***அன்பின் திருவுருவே"*** என் அம்மான்

அம்மான், அம்மான் என்று கதறுகின்றோம், குமுறுகின்றோம் உங்கள் காதில் விழவில்லையா? அம்மான். ஏன் அம்மான் இவ்வளவு சீக்கிரத்தில் எங்களை விட்டு தொலைதூரம் சென்றீர்கள். தாய்மாமன் தாய்க்கு சமானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வார்த்தையில் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் எங்கள் அம்மான் அதுபோலவே வாழ்ந்து காட்டியவர். தன்னுடைய சகோதர, சகோதரிகளின் பிள்ளைகளை தன் பிள்ளை போல் பார்த்து அன்பு மழை பொழிந்தவர். என் அம்மான் கோயில்.

"கூடிப்பிறக்க கோடி தவம் செய்ய வேண்டும்" என்று கூறுவார்கள். என் அம்மான் என்ன தவம் செய்தார்களோ உங்களுடன் கூடிப்பிறக்க. நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்த போது எல்லோரும் ஒரே வீட்டில் கூடிக்குலாவி மகிழ்ந்திருந்தோமே. எங்களை இறுக்கிக் கடித்து கொஞ்சுவதும் நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வெற்றிலையில் எங்களின் வாயில் எடுத்து வைப்பதும் என்று எங்களிடம் அன்பாய் இருந்தீர்களே அம்மான். நீங்கள் சப்பித்தந்த வெற்றிலையில் இருந்த சுவை நான் வேறெதிலும் கண்டதில்லை அம்மான்.

என்னால் தாங்கமுடியவில்லை அம்மான் நெஞ்சம் வெடிக்கிறது மாமிக்கு என்னவென்று ஆறுதல் கூறுவது என் அம்மம்மாக்கோயிலை கதிகலங்க வைத்து சென்று விட்டீர்களே அம்மான்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இம்மானிலத்தே"

என்ற கூற்றுக்கிணங்க எவ்வளவு தான் அழுதாலும் மண்ணில் பிறப்பவர்கள் மரணிப்பது உண்மை என்பதை மனதில் கொண்டு எங்கள் அம்மான் கடவுளின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விசவத்தனை வேலன் துணைபுரிவானாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

என்றும் உங்கள் அன்பின்

**மருமகள்**

**ரோகினி, பாபு, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கம் என் பெரியம்மான் கடவுள்

அன்பாய் பண்பாய் பழகுவதற்கு இனிமையாய்
எனது உள்ளத்தில் நிறைந்து நிற்கும்
என் பெரியம்மான் கடவுள்
ஒருசொல் கூட கூறாமல் அமைதியாக
நிரந்தர உறக்கம் கொண்டது தான் ஏனோ?
நான் உயிர் பிழைப்பதற்காக
நீங்கள் இறைவனிடம் வேண்டி
எனக்கு உயிர் கொடுத்தீர்கள்
நீங்கள் திரும்ப எனக்கு வேண்டும் என்று இறைவனிடம்
மன்றாடுகின்றேன், வரம்பெறுவேனா?
என்னை இறுக்கி அணைத்து முத்தமிட்டு
“தோல்பெட்டை, பூப்பெட்டை” என்று வர்ணித்து
என் அம்மாவிடம் எந்த நேரமும் என்னை பற்றி விசாரித்தது
அந்த வாய் ஏன் உறங்கிக் கொண்டிருக்கிறது

பெரியம்மான் கடவுள் ஒன்றென்ன
ஓராயிரம் மாதங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்
நெஞ்சைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
விசவத்தனை முருகனை வேண்டுகின்றேன்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அன்பு மருமகள்

**மருமகள் சரங்கா,**

**மகன் முருகதாஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மான் கடவுள்

அன்பாக பழகி அனைவரதும் மனம் நெகிழ
உறவாடித் திரிந்தீர்களே அம்மான் கடவுள்
உங்கள் கனிவான முகங் கண்டு
கலங்காதோர் எவரும் இல்லை
ஆலமரம் சாய்ந்தது போல் சாய்ந்து விட்டீர்கள்
ஏன் இந்த சோகம் எங்களுக்கு
இனி எப்போ காண்போம் உங்களை
எப்படி முடியும் இனி உங்கள் பிரிவை மறக்க
நல்லவர்கள் நெடுநாள் வாழ்ந்ததில்லை என்பது
எவ்வளவு பெரிய உண்மை என்பதை
உங்களால் தான் நாம் கண்டு கொண்டோம் அம்மான் கடவுள்
உறவும் ஊரும் உயரணும் என்று
உங்களை மெழுகுவர்த்தி ஆக்கியவரே
எங்களால் தாங்க முடியவில்லை
ஆற்றுவாரும் இன்றி தேற்றுவாரும் இன்றி
அல்லல்படுகின்றோம் நாங்கள்

உங்கள் பிரிவால் தவிக்கும்

**மருமகள் - கார்த்திகா**

**மகன் - அனந்தன்**

**பேரப்பிள்ளைகள் - தாரணி, அஷ்வின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்புக்குரிய பெரியம்மான்

நான் உங்களை அழைத்ததுதான் அம்மான் என்று. மனதில் நினைத்தது அப்பாவாக, மகளாக இருந்து கடமை செய்து அழகு பார்க்க ஆசைப்பட்டேன். அதற்கும் வாய்ப்பு கிடைக்காத துர்ப்பாக்கியவதி நான். இறுதி மட்டும் வலிகள் காட்டாமல் உதவி கேட்காமல் இருந்தீர்கள். அது போல மரணத்தையும் தோள்மேல் சுமந்து, மரணப்படுக்கையில் போய்ப்படுத்தீர்கள்.

உங்கள் கோபங்கள் நான் பார்த்ததில்லை.
ஒரு சுடு சொல்லை செவிகள் கேட்டதில்லை
உங்கள் கண்கள் உறங்கி பார்த்ததில்லை
ஒருதரம் மறுமுறை விழிப்பீர்களா?
- காத்திருக்கின்றேன்

அன்பே உங்கள் ஆயுதமாய்
இரக்கமே உங்கள் கரங்களாய்
தைரியமே உங்கள் எண்ணங்களாய்
கொடுப்பதே உங்கள் வாழ்க்கையாய்
கொண்ட உத்தம மனிதர் நீங்கள்

ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள்
நாங்கள் இளைப்பாறினோம்
இன்று பரிதவிக்கின்றோம்
உங்கள் நினைவுகள் மட்டும் சுமந்து

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**

*உங்கள் பிரிவை தாங்கமுடியாமல் தவிக்கும்*

**மருமகள் - கீர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கமான என் கடவுள் தாய்மாமாவே

தங்கமனம் கொண்ட தன்னிகரில்லா
அன்பு அம்மானே
எங்கே நாம் சென்று இனியுங்களைக் காண்பது
மாண்புமிகு மகத்தான மனம் படைத்தவரே
வெந்து நாம் அழுகின்றோம்
துடைக்க வரமாட்டீரோ
பெற்ற தந்தையைப் போலெம்மைப்
பேணிக் காத்தீர்களே
எம் நினைவெல்லாம் நீங்காது
நிறைந்திருப்பவர் நீங்களன்றோ

அழியாத உயிர் கொண்ட என் அம்மானே
ஆண்வடிவில் நீயென்றும் என் அன்னையே
வீரத்தின் மகன் என்று ஊர் சொல்லுமே
நீதானே அசல் என்று ஊர் சொல்லுமே
உன் போல சிலர் இன்று உருவாகலாம்
உன் உடல் கொண்ட அசைவிற்கு நிகராகுமா?
இருந்தாலும் இறந்தாலும் நீ யானைதான்
கடல் தாண்டி பொருளீட்டும் உன் கீர்த்திதான்
தலைமுறைகள் கழிந்தாலும் உன்பேச்சுத்தான்
அம்மான் என்னும் மந்திரமே எம் மூச்சுத்தான்

தங்கள் பிரிவால் வாடும்

**மருமகள் - சியா குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியம்மான்

பெரியம்மான் உங்கள் அகம் பெரிது
பெரியம்மான் உங்கள் கொடை பெரிது
பெரியம்மான் உங்கள் இரக்கம் பெரிது
பெரியம்மான் உங்கள் பொறுமை பெரிது
பெரியம்மான் உங்கள் தியாகம் பெரிது
பெரியம்மான் உங்கள் அன்பு பெரிது
பெரியம்மான் உங்கள் பண்பு பெரிது
பெரியம்மான் உங்கள் கம்பீரம் பெரிது
பெரியம்மான் உங்கள் உடை அழகு பெரிது
பெரியம்மான் உங்கள் தைரியம் பெரிது
பெரியம்மான் உங்கள் அறிவு பெரிது
பெரியம்மான் உங்கள் மதிப்பு பெரிது
பெரியம்மான் உங்கள் மரியாதை பெரிது
பெரியம்மான் உங்கள் பெருந்தன்மை பெரிது
பெரியம்மான் உங்கள் விருந்தோம்பல் பெரிது
பெரியம்மான் உங்கள் புகழ் பெரிது

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும் போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனை சரிசெய்ய உதவுகின்றனவோ. அதைப்போல எங்களுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்து செயல்படுவதே பெரியம்மானின் இலக்கணமாகும்.

பெரியம்மானின் கால் அடியை பின் தொடரும்

**மருமகன் - சுதர்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகின்றானோ அந்த அளவுக்குத் தக்கபடி அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்"*** (சுவாமி விவேகானந்தர்)

## பாசமான பெரியம்மானே

அன்பின் பிறப்பிடமே
ஆனந்தத்தின் வசிப்பிடமே
இன்பத்தின் மகிழ்விடமே
ஈழத்தின் புகழிடமே
ஆசைமொழிபேசி என்றும் அன்பால் அணைத்திட்ட அம்மானே
நான் கேட்கும் உதவி எல்லாம் தப்பாமல் உவந்து செய்த நாளை எண்ணி உள்ளம் தவிக்குதம்மான்.
இந்த உலகில் உலாவுகையில் என் இதயம் ஏங்குதம்மான்.
உங்கள் இழப்பு என் எண்ணத்தை உறைய வைக்குதம்மான்.
நான் புலம்பி அழுகின்றேன் அம்மான்.
நீங்கள் என்னை விட்டு நீண்ட தூரம் சென்றாலும் உங்கள் அன்பு முகம் என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் அம்மானே.
நான் உங்களுடன் வந்திருந்து கழித்த நாட்கள் எல்லாம் இன்னமும் இனிக்குது பெரியம்மான்.
இனி அந்த சொல்லுக்கு இப்பாரினிலே உங்களுக்கு நிகர்யார் பெரியம்மான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமும் நான் உங்களை தேடுகின்றேன். நீங்கள் இல்லாத பூமியிலே நிம்மதி தான் எனக்கு எங்கே. எத்தனை உறவுகள் சூழ்ந்தாலும் அத்தனையும் என் பெரியம்மான் கடவுளின் அன்புக்கு நிகராகுமா.

எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட என் பெரியம்மான் கடவுளின்

**ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்**

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

*உங்கள் மருமகள்*

**மருமகள் செல்வி, மகன் செல்லா.**

## அன்புள்ள பெரியம்மான் கடவுள்

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தது இப்பவும் கனவாகவும் மாயமாகவும் இருக்கின்றது. நான் அக்கனவிலிருந்து எழும்பி உங்களை ஒருமுறையாவது கட்டி அணைக்க விரும்புகிறேன். ஆனால் நிஜத்தை ஏற்றுக்கொள்ளும் போது என் மனதால் தாங்கமுடியாமல் இருக்கின்றது. கண்ணீர் அருவியாக கொட்டுகின்றது.... உங்களை நான் பெரியம்மான் என்று கூறுவதற்கு ஒரு காரணம் உள்ளது. உங்களை விட பெரிய மனசு ஒருவருக்கும் இல்லை. நீங்கள் எனக்கு பெரியம்மான் மட்டும் அல்ல, நீங்கள் கடவுளுக்குச் சமம். உங்களின் எல்லை இல்லாத பாசத்தால் எங்களை கவர்ந்தீர்கள். சுயநலம் இல்லாமலும் பேராசையில்லாமலும் எங்களின் சந்தோஷத்திற்காக மட்டுமே வாழ்ந்தீர்கள். கொடை வள்ளலாக இருந்தீர்கள். உங்கள் பேரின்பத்தால் எல்லா இதயங்களையும் வென்றீர்கள். சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் எங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தீர்கள். எங்களை எப்பொழுதும் சிரிக்க வைப்பீர்கள். உங்கள் புன்சிரிப்பைப் பார்க்க நான் எங்கே செல்ல வேண்டும். மறைந்திருந்து ஜன்னலால் பார்த்து "எடேய்" என்று அழைத்து மற்றவரை பயப்பிடுத்த இனி யார் இருப்பார். நான் சிறுமியாக இருக்கும் பொழுது "stand பூட்டி" நிற்கும் கதையை இனி யார் கூறுவார். "நான் சின்னம்மான் கதைக்கிறேன்" என்று எங்களை ஏமாற்றி, சிரிக்க வைப்பதற்கு யார் இருப்பார். உங்களோடு இருந்த நேரமும், அந்நினைவுகளும் போதாதளவில் இருந்தாலும் அதுவே என் பொக்கிஷம். இன்னும் பல வருடங்கள் உங்களுடன் சேர்ந்து மகிழ்வதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை. நீங்கள் எனது பெரியம்மானாக இருப்பது எனக்கு மிகப் பெருமையாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி நான் உங்களின் மருமகளாக இருப்பதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும் - என் அதிர்ஷ்டம்

**என்றும் கண்ணீருடன் உங்களின் மறையாத**
**நினைவுகளைச் சுமப்பேன்**

உங்கள் அன்பை மறவாத

**நிசா**

## என் பெரியம்மானின் அவதாரம்

மரங்களில் பெரியது ஆலமரம்
அதேபோல் எங்கள் குடும்பத்தை அரவணைத்தார், என் பெரியம்மான்.

பூக்களில் தூய்மையானது தாமரை
அதேபோல் எங்கள் பெரியம்மானின் மனது தூய்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடையில் சிறந்தவர் சூரியபகவான்.
அதேபோல் கொடையில் சிறந்தவர் என் பெரியம்மான்.

பொறுமையில் சிறந்தவள் பூமாதேவி.
அதேபோல் அவளுக்கு நிகராக அவள் மடியில் நீங்கள் தவழ்ந்தீர்கள்.

மிருகங்களின் கம்பீரமானது சிங்கம்.
அதேபோல் கம்பீரமானவர் என் பெரியம்மான்.

இரத்தினங்களில் ஈடு இணையற்றது வைரம்.
அதேபோல் ஈடு இணையற்றவர் என் பெரியம்மான்.

பூலோகம் இயங்குவதற்கு மூலகாரணம் பஞ்சபூதங்களின் ஒத்துழைப்பு.
அதேபோல் பெரியம்மானின் ஒத்துழைப்பால் இயங்குவது எங்கள் வம்சம்.

இன்று நீங்கள் அந்த பஞ்சபூதங்களுடன் ஒன்று இணைந்து விட்டீர்கள்.
உங்கள் அடுத்த அவதாரத்தை எதிர்பார்த்து ஏங்கும் இதயங்களில் ஒன்று

**முகுந்தன் சந்திரசேகரம்**
மருமகன்

**"நம்பிக்கை, நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்"**

(சுவாமி விவேகானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு பெரியம்மான் கண்

எமது அன்பும் பாசமும் நிறைந்த பெரியம்மான் கண் மறைந்த செய்தி கேட்டு மாபெரும் அதிர்ச்சி அடைந்தோம். இது நிஜமோ பொய்யோ என்று தெரியாமல் தவித்தோம்.

உங்களின் பிரிவை எங்களால் நம்பமுடியவில்லை உங்களைப் போல் பாசமான அன்பான அம்மானை நாங்கள் இனி காணமுடியாது என்று சிந்திக்கும் பொழுது கண்ணீர் கண்ணீராக கொட்டுகிறது. நீங்கள் எங்களைவிட்டுப் போனாலும் உங்களின் ஒவ்வொரு செயலும் நடைமுறையும் எங்கள் மனதில் பதிந்திருக்கின்றது.

பெரியம்மான் என்றால் பாசம். பாசத்தை பல முறைகளில் வெளிக்காட்டுவீர்கள். நாங்கள் வருகிறோம் என்று தெரிந்தபின் வீட்டு வாசலில் எங்களுக்காக காத்திருப்பீர்கள் ஒவ்வொரு முறையும் நாங்கள் விரும்பிச் சாப்பிடுவதை சமைத்து வைத்திருப்பீர்கள்.

தினமும் எங்களை "நரச்சி, சின்னப்பெட்டை, கொலண்ட்சி" போன்ற செல்லப் பெயர்களால் அழைப்பீர்கள்.

சந்திக்கும் பொழுதும் பயணம் போகும் பொழுதும் எங்களை கட்டி அணைத்து கொஞ்சுவீர்கள்... அத்துடன் உங்கள் தாடியால் உரஞ்சி விடுவீர்கள்.

உங்கள் பாசத்திற்கு எல்லை இல்லை. சந்தோசத்தைக் கொண்ட இந்நாட்களை நாங்கள் நம் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம்.

***உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்***

உங்கள் அன்பு மருமக்கள்

**கொலண்சியா, சோபியா, கரிஸ்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் கொடைக்கு கண்ணீர் அஞ்சலி

செந்தமிழ் வீதியெல்லாம் சந்தணம் கமழுநிதம்
மந்தரத் தமிழ் தென்றல் வந்து வந்து தாலாட்டும்
ஈழத் தலைமையென இலங்குபுகழ் யாழ்ப்பாணம்
வாழப் பெருமைகொள்ளும் வளம் நிறைந்த சுழிபுரத்தின்
பழம்பெருமை கொண்டபதி பண்ணாகம் தெற்கதனில்
குலம் சிறக்க வந்துதித்த குலசேகரம் பிள்ளையார்
சேய்தவத்துப் பேறாய் திருமுருகன் அருளாலே
ஐயா! இப்பூவுலகில் அவதாரம் நீ கொண்டாய்

சின்ன வயதினிலே சிறகொடிந்து போனவர் நாம்
தந்தையைப் பறிகொடுத்து தவித்திருந்த வேளையிலே
சொந்த உறவின் துணையாகி நீ நின்றாய்
சிந்தை கலங்காதுன் சிறகுக்குள் எமைக்காத்தாய்
எந்தையும் தாயுமாய் எக்குறையும் அண்டாமல்
முந்தியே நாமிருக்க முனைப்பில் உயிர்ப்பானாய்
இம்மாநிலத்தில் நாம் ஏற்றும் பெரும்தெய்வம்
அம்மான் கடவுளெனும் அவதாரம் நீ ஐயா

போர்ச் சூழலென்ற புன்மை யிருளுக்குள்
ஆட்கொள்ளப் பட்டதனால் அவலமே வாழ்வானோம்
சொத்திழந்து சுகமிழந்து துன்பத் துயருற்று
நித்திலமாம் யாழ்விட்டு ஜேர்மன் புலம்பெயர்ந்தாய்
உடலங்கே உளமிங்கே ஒன்றிவிட முடியாமல்
இடருக்குள் நீயுழன்ற இன்னலைநாம் நன்கறிவோம்
வருகின்ற ஆண்டு இலங்கை வருவாய் எனவறிந்து
பெரும்பேறே உனைக்காண பேராசை கொண்டிருந்தோம்
ஓய்வென்றும் சாயாமல் நோயென்றும் வீழாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்வே அறியாத் திருமகனாய் ஈழத்தில்
சுற்றித் திரிந்தவுன் சுகமான வரலாறு
இற்று விழுமுன்னே முற்றுப் பெறுமென்று
எண்ணி யிருந்தோமோ? ஏனைய சொல்லாமல்
கண்மூடிக் கொண்டாய் காலனவன் உள்ளிருந்து
மெல்ல மெல்ல உனைத்தழுவி மேலழைத்துச் சென்றானோ
வள்ளலே இந்த வையத்துள் நீயென்றும்
வாழ்வாங்கு வாழ்ந்ததனால் வானுறையும் தெய்வத்துள்
மேலாம் பெரும்பேறாய் வீற்றிருத்தல் நிச்சயமே
நாளும் பொழுதுமெம் நன்விடை தோய்ந்திருக்கும்
காலக் கொடையேயெம் கண்ணீரால் அஞ்சலித்தோம்

பிரிவால் துயருறும்

**மருமகள் - சூரி**

**மகன் - பாபு**

**பேரக்குழந்தைகள் - அகில், வாசன்**

## என் அம்மான் கடவுள்

என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அம்மான் கடவுள் எப்போது இனி உங்களைக் காண்பது யாரை இனி பெரியம்மான் என்று அழைப்போம்.

இன்னும் பலகாலம் எங்களுடன் இருப்பீர்கள் என்று தான் நினைத்திருந்தோம். நீங்கள் இவ்வளவு கெதியாக எங்களை விட்டுப்பிரிவீர்கள் என்று நினைக்கவில்லை. நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரும்பொழுது எனக்கு வேண்டிய உடுப்புக்களை வாங்கித் தருவீர்கள். அதை எனக்கு இனி யார் செய்வார்கள். ஒவ்வொரு உடுப்புக்களையும் பார்க்கும் பொழுதும் உங்கள் நினைவு தான் வருகிறது. மறக்கமுடியாது உங்களை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு நீங்கள் ஊரில் இருந்தபோது நடந்த கதைகள் எல்லாம் சொல்வீர்கள். நன்றாய் படிக்க வேணும் என்று நல்ல புத்திமதி சொல்வீர்கள். பக்கத்திலிருந்து யார் எமக்கு கதை சொல்வார்கள். எம்மைக் கட்டி அணைத்து முத்தமிடுவதை நாம் இனி எங்கே காண்போம். தாங்கமுடியவில்லை எங்கிருந்தாலும் உங்கள் இனிய நினைவுகளில் ஈரவிழிகளுடன்

அன்பு மருமகன்

**தினேஷ்**

## என்னுயிர் அம்மான் கடவுளுக்கு ...

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அம்மான் கடவுளிற்கு, உங்கள் மறைவு எங்கள் எல்லோருக்கும் ஆறாத் துயரத்தைக் கொடுத்துள்ளது. இவ்வளவு சீக்கிரத்தில் ஆண்டவன் ஏன் தான் அழைத்தாரோ என்ன செய்வது நாம் எவற்றிலுமே கொடுத்து வைக்காதவர்கள் அம்மான். எங்களை வாழ வைத்த தெய்வமே எங்கு சென்று தேடினாலும் கிடைக்காத செல்வத்தை இழந்து விட்டோம் அம்மான். எனக்கு விசா கிடைத்த உடன் முதன் முதல் என் தெய்வத்தை வந்து பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். என் ஆசை எல்லாம் நிராசையாகி விட்டதே. அம்மான் கடவுள் எங்களை வெகு சீக்கிரத்தில் பிரிந்து செல்வீர்கள் என கனவிலும் நினைக்கவில்லை. பாசத்தை ஊட்டி வளர்த்த தெய்வமே. மரணத்தை வெல்ல எவராலும் முடியாது. அம்மான் நீங்கள் மரணித்தாலும் உங்கள் நினைவுடன் உங்கள் ஆத்மா சாந்திக்காக விசவத்தனை வேலனின் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்.

அன்புடன்

**அன்பு மருமகள் - சுபா**

**மகன் - விக்னேஸ்**

**பேரப்பிள்ளைகள் - விஜி , வினேஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலாம் எம் பெரியப்பா

உறவுகளுக்கு ஒன்று என்றால் ஓடிவருவார்
அன்பாய் பண்பாய் இருந்த பெரியப்பா
தன் கையிலிருப்பவற்றையும் பிறருக்கு கொடுக்கும் வள்ளல்
யாரையும் நோகடிக்கும் வல்லமை அவரிடம் இல்லை
பாசத்தைக் கட்டிப் போடுவதில் வல்லவர்
நேர்மையும் நாணயமும் மிக்கவர்
உயிரோடு உயிரான உருவம்
கண்ணுக்குள் நிறைந்திருக்கும் அன்புருவம்
எல்லோர்க்கும் தேவையை உணர்ந்து செய்வார்,
எங்கள் பெரியப்பா
தன் பிள்ளைபோல் தன் பெறாமக்கள் மீது கொள்ளை அன்பு கொண்டவர்.
சூரியனாய் என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருப்பார்.

**பெரியப்பா, பெரியப்பா, பெரியப்பா**

அன்புள்ள
**பெறாமக்கள்**

# You will never be forgotten

A great man- yes that's how we would describe you. He used to live with us for a couple of years and hence saw us growing from being a child to grown-up men. Once he got married and found his soul mate in Anni he moved out and began his journey as a married man. Despite that, he never forgot us and always looked up for us and inquired about our health and our university studies. His humbleness, sincerity and mercy fulfilled our lives significantly.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

What we both fell right now is so hard to put into words. He was a very special person to us. A guardian that helped us being the men we are now. He was there for us and would always welcome us with open arms and greet us with a kiss on our cheeks. We would spend hours talking about everything and each conversation would end up in a smile and comfort that only he was able to pull off. You have enriched our life with happiness, laughter and with incredible unforgettable moments that have ultimately directed us to the right way and made us the persons that we are now. Without you this would have not been possible and everybody as well as our parents know this well. We could always pop up unannounced and you always welcomed us with open arms and with a big smile.

He was more than a family friend to us. We would always refer to him as our godfather and a man who would always defend and support us any situation. For more than 20 years he was in our lives and we would have never thought that he would leave us so soon, so unexpected. He was the strongest, friendliest and calmest person we have ever met in our life and he taught us life lessons that we will never forget and which we will impart to our children quoting our Jogu Annai's own words. We cannot imagine our hometown without you. He was always there and the thought that he is no longer with us is unbearable and difficult to imagine. As a family, us four spent most time with you and Anni in your



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

living room with a cup of Anni's coffee, cakes & biscuits and shared and shared all kind of information and always left your door with a smile, happiness and composure and were always eagerly looking forward to see you again.

We will miss you Yogu Annai! the first thing both of us did once we arrived in our hometown was to see our parents firstly and then secondly pay a visit at your house to see you and Anni. The thought that this is now almost not possible makes us cry. You will be forever in our hearts, prayers and memories. We are all so sad that our children will never meet you. A man, who would always put smiles on our faces. We are aware that you are up there and that you have not disappeared from our lives.

Your time was so brief it was our fortune to be so blessed with you and we are infinitely happy and thankful to God that we have spent and shared a lot of time with you.

Thank you everything and thank you for giving us the unconditional love. We have truly appreciated it. Don't worry Anni, your and our family take great care of your **"Pokkisham"**.

*We love you*
*God bless you, your sons*
**Sathees & Nesan**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத்தாத்தா

தாத்தா நீங்களும் எங்களைவிட்டு போய்விட்டீங்களே. நாங்கள் உங்களிடம் வரும் போதெல்லாம் எங்களை வெளியே கூட்டிச் செல்வீங்களே. எங்களை கட்டி அணைத்து முத்தம் தருவீங்களே தாத்தா. எங்களுக்கு உடுப்புக்கள் வேண்டி தருவீங்களே. அதை போட்டு காட்டினால் அதை பார்த்து சந்தோசப்படுவீங்களே. இனி அதெல்லாம் எப்போ நாம் காண்போம். கடைசியாய் எங்களிடம் வரும் பொழுது உடுப்புக்கள் வேண்டி தந்தீர்களே தாத்தா. எல்லாம் கனவு போல் ஆகிவிட்டதே. இனி நாம் எப்போ உங்களை காண்பது தாத்தா.

*உங்கள் பிரிவால் வாடும்*
**உங்கள் பேரப்பிள்ளைகள்**
**பிரவீன், சந்தோஷ், சந்ரு**

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அன்பான தாத்தாவே! ஆசை தாத்தாவே!
உங்களுக்கு பேரப்பிள்ளைகளாக பிறந்ததே, நாம் செய்த பூர்வ புண்ணியமாகும். தாத்தா நீங்கள் எங்களுடன் கொஞ்ச நாள் தான் பழகினாலும், உங்கள் பாசமான வார்த்தையும் சிரிப்பும் எங்கள் மனதைவிட்டு மறையவில்லை. நீங்கள் மறைந்தாலும் கூட அந்த கொஞ்ச நாட்களில் எங்களுடன் சினேகிதர்களுடன் பழகுவது போல் சிரித்து சிரித்து மகிழ்ந்து கதைப்பீர்களே! இனி யாருடன் தாத்தா சந்தோசமாக கதைத்து மகிழ்வது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருவரும் சண்டை பிடிக்கும் போது தந்தையாக இருந்து பிரச்சினையை தீர்த்து வைப்பீர்களே தாத்தா. உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்து அழுகின்றோம் தாத்தா. உங்கள் அன்பை எழுத எழுத்தில்லை. சொல்ல வார்த்தைகள் கூட இல்லை. உங்கள் ஆசீர்வாதம் வேண்டி நிற்கின்றோம்.

அன்பான பேரப்பிள்ளைகள்
**செல்வானந்தி, அரவிந்தன்**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

இத் தெய்வக் குறளுக்கு உதாரணமாக வாழ்ந்த எங்கள் பணிவும், பரிவும், பாசமும் நிறைந்த மைத்துனர் மாமா இன்று எம்மோடு இல்லை. உங்கள் மனைவி (எங்கள் சகோதரி, மாமி) இன்று உங்களை பிரிந்து தனிமரமாய் ஏங்கி வார்த்தைகள் இன்றி தவித்து நிற்கிறார்.

இந்தத் துயரத்தை நாம் எம் கண்களால் பார்த்து ஆறுதலுக்கு வழி தேடி அலைகின்றோம். எங்கள் மைத்துனரே, மாமாவே நீங்கள் எம்மை விட்டு சென்றீர்கள் என்ற அந்த திடீர் செய்தியை கேட்டு உங்களை பிரிந்த ஆழமான துயரத்தில் மூழ்கி நிற்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்**

இப்படிக்கு,
**மைத்துனர் இலங்கோவன் குடும்பம்**
டென்மார்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகா அண்ணா என ஓயாது நாம் அழைக்கும் எமது அருமை மைத்துனா

உவகையுடன் ஓடிவந்து வேண்டும் உதவி எல்லாம் விருப்புடனே செய்து, எம்மை அன்பாய் ஆட்கொண்டு ஆனந்தமாய் பேசி பண்போடு பாசமதை பகிர்ந்தளித்து பரவசமாய் உரையாடும் அண்ணாவே!. திடீரென ஓடிவிட்ட விந்தை என்ன?.

கடமை எல்லாம் யாவர்க்கும் கச்சிதமாய் நீ முடித்து இனிதாக வாழ்க்கையிலே ஏன் மறைந்தாய் அவசரமாய். ஆறாத்துயரம் எமக்கு அன்புடைய அண்ணாவே மாறாது இக்கவலை.

ஆண்டவனின் பாதமதில் நீங்கள் சாந்தி பெற வேண்டுகிறோம்.

**சம்பந்தன், நிரஞ்சனா**

மைத்துனர் (லண்டன்)

அன்பும் பண்பும் நிரம்பிய மைத்துனர் யோகாவின் இழப்பு அவரின் குடும்பத்துக்கும், சகோதரர்க்கும், உறவினர், சுற்றத்தவர், நண்பர்கள், ஊரவர் எல்லோருக்கும் ஆறாத்தயரத்தை கொடுத்துள்ளது. இந்தத் துயரச்செய்தி எட்டியதும் இது பொய்யாய் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று மனம் ஏங்கியது.

"நாலு பேருக்கு நல்லது செய்" என்பது பொன்வாக்கு. அதற்கேற்ப வாழ்ந்து காட்டினார். எனக்கு சொந்த சகோதரர் போலவும் நல்ல நண்பனாகவும் கூட இருந்தார். அவரை பற்றி யாரும் ஒரு குறையும் கூற முடியாது. ஒரு நல்ல மனிதனாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து எல்லோரையும் பெருமைப்படுத்தினார். இப்படி ஒரு நெருங்கிய உறவை திடீரென இழந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் விடுபட முடியாமல் தவிக்கிறேன்.

சின்னப்பிராயத்தில் கோயில் கட்டி விளையாடுவோம். அதில் தம்பி கோயில் அர்ச்சகராக வேடம் ஏற்பார். நானும் அவரின் அக்காவும் (செல்வம்) திரவியமும் (தங்கை) அக்கம் பக்கத்தில் உள்ள சில பிள்ளைகளும் பக்த கோடிகளாக நிற்போம். எல்லாம் ஒழுங்காக செய்து பிரசாதத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்திடுவார். அவருக்கு எதுவும் கிடையாது. மற்றோருக்கு கொடுப்பதில் சின்ன பிராயத்தில் இருந்தே சந்தோசமடைந்தவர். இதுவே அவரின் முழு வாழ்க்கையிலும் தொடர்ந்தது. நெஞ்சுள்ளவரை அவரின் நினைப்புகளும் வாழும்

**மைத்துனி சிவசோதி பாலா**
**(ராசு)**

## பெரியம்மான்

நீங்கள் துரோகம் செய்து விட்டு சென்று விட்டீர்களே. ஒன்றும் சொல்லாமல் திடீரென என்னை ஏமாற்றி விட்டு உங்கள் நினைவில் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர்களே. என் மனம் வலிக்கிறதே. நீங்கள் எனக்கு மருந்து கொடுப்பீர்களே. இனி யார் உங்களைப் போல் என் மீது அக்கறை காட்டுவார்?. யார் நான் செய்யும் சிறு வேலைகளைப் பார்த்து பெருமைப்பட. யார் பட்டப்பெயர் வைத்து கூப்பிடுவார்? யார் எங்களைப்பற்றி கதைகள் சொல்லுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய தைரியம் தான் உங்கள் பலம். ஆனால் உங்கள் பலவீனம் உங்களுக்கு என்ன வருத்தம் என்றாலும் மனதுக்குள் வைத்து பூட்டிக் கொள்வீர்கள். இந்தப் பழக்கம் ஒன்று தான் உங்களிடம் பிடிக்காதது. உங்களை எத்தனை முறை ஏசி இருப்பேன். நீங்கள் மருத்துவரிடம் போகாமல் அக்கறை இல்லாமல் இருந்ததுக்கு. ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் நான் உடனடியாக வந்திருப்பேன்.

நீங்கள் கூறினீங்கள் இனி ஒழுங்காக Doctor இடம் செல்வீர்கள் என்று. ஆனால் நீங்கள் பொய் சொல்லிவிட்டுச் சென்று விட்டீர்களே. எனக்கு கோவம் வருகிறது. இப்படி சுயநலமில்லாமல் ஒரு மனிதன் இருக்கலாமா?. எனக்கு நல்ல அப்பாவும் நல்ல அம்மாவும் இருந்தும் நீங்களும் எனக்கு ஒரு அப்பாவாகவும், அம்மாவாகவும் இருந்தீர்கள். இன்னும் உங்கள் குரல் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. நீங்கள் phone இல் சொல்லும் முதல் வசனம் "நான் சின்னம்மான் கதைக்கிறேன் குரலில் கண்டு பிடித்தீங்களா? என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இனி யார் இரவு 10.00 மணிக்கு எங்களுக்கு phone அடிக்க. யார் "பெட்டிவாய் சொறிப்பெட்டை" என்று கூறி விட்டு உங்களைப்போல் அழகாக சிரிக்க. யார் என் தலைமுடியை துடைத்து விடுவார். யார் என்னை சிரிக்க வைக்க?. யார் உங்கள் அன்பான கைகளால் முதுகில் தடவி விடுவார். யார் "ஆய்" என்று சொல்வார். எனக்கு நினைக்க கோவம் வருகிறது. ஒரு நாளும் நான் இப்படி அழுததில்லை. நீங்கள் சொல்லி இருப்பீர்கள் "அழாதையடி மேனே" ஏன் இப்படி செய்தீர்கள். உங்களைப்போல் ஒரு நல்ல மனிதன் அன்பான மகன். பாசமுடைய அண்ணன், பொறுப்பான கணவன், அபூர்வமான அம்மான், கனவில் கூட நினைக்க ஏலாத தாத்தா, அற்புதமான மச்சான், மற்றும் ஒரு சிறந்த நேர்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பன், என் வாழ்க்கையில் இருந்து பிரிந்தது என்னால் தாங்க முடியவில்லை. இதயம் வலிக்கிறது. என் அம்மான் சென்றுவிட்டார். நீங்கள் என் வாழ்வில் இருந்தது ஒரு பெரும் பாக்கியம். என்ன புண்ணியம் செய்தேனோ எனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் விட்டாலும் நான் கடவுள் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று கூற வேண்டும் என்றால் உங்களைப் போல் இருப்பார். உங்களிடம் நான் என் தெய்வத்தைக் கண்டேன். இப்பொழுது என்னை விட்டுச் சென்று விட்டீர்களே. மீண்டும் எப்பொழுது இனி உங்களை சந்திப்பேன்?. ஒவ்வொருவரும் உங்களை தெரிந்திருப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். என் கவலையைச் சொல்வதற்கு வார்த்தையே இல்லை. கோவம் மட்டும்தான் கண்ணீராக உதிர்கிறது. ஒவ்வொரு கண்ணீர்த்துளியும் நீங்கள் எனக்கு தராமல் போன ஒவ்வொரு முத்தத்துக்கும் சமம்.

எப்பொழுதும் என் மனதிலும் என் நினைவுகளிலும், என் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு அணுக்களிலும் நீங்கள் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள். நீங்கள் இருந்த இடத்தில் இப்பொழுது இல்லை. ஆனால் நான் எங்கே எல்லாம் இருக்கிறேனோ அங்கெல்லாம் நீங்கள் இருப்பீங்கள். உங்கள் உடம்பிலும், மனதிலும் இருந்த வலியிடம் இருந்து உங்களை விடுவித்தது ஒன்று தான் என்னை ஆறுதல் படுத்துகிறது. வாழ்க்கை முடியும், ஆனால் உங்கள் அன்புக்கும் காதலுக்கும் முடிவே இல்லை! எனக்கு வலித்தாலும் உங்கள் நினைவு எப்பொழுதும் இருக்கும்

உங்கள் இடிப்பால் துயருறும்

**உங்கள் நிலானி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத கண்ணீர்த் துளிகள்

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்துஇவ் வுலகு"**

அன்பும் பாசமும் அகலாத யோகாண்ணைக்கு. 1987ம் ஆண்டு தொடக்கம் இற்றை நேரம் வரைக்கும் (01.09.2014) இணைபிரியா நண்பர்களாக இருந்தோம். விதி முந்தி விட்டது என்றே சொல்லத் தோன்றுகின்றது.

யோகண்ணை, யோகண்ணை என்று ஓடி, ஓடி, நீங்களும் நாங்களும் எவ்வளவு நலமாக இருந்தோம். உங்களின் இழப்பு எமது குடும்பத்தை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**வீ.குஞ்சுத்தம்பி குடும்பத்தினர்**

## சைவத்திரு.கு.யோகநாதன் அமரத்துவம்

குலசேகரம்பிள்ளை யோகநாதன் அவர்கள் என் ஆத்ம நண்பர். கிட்டத்தட்ட கால்நூற்றாண்டு நட்பு உண்டு. பழக இனியவர், பண்பாளர், சமயப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் மிக்கவர். தன்னாலான பங்களிப்புக்களை வீட்டுக்கும் நாட்டுக்கும் செய்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுயரும் வியனுலகில் வைக்கப்பட்டுள்ளார். நல்லவனுக்கு நடு வயது என்பதற்கேற்ப நோய்கள் இருந்த போதும் யாருக்கும் தொந்தரவு இன்றி தன் தேவைகளைத்தானே செய்வதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றவரை உறவினர்க்கும் உதவி, பாய் படுக்கையின்றி இறைவனடி எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரை இழந்து தவிக்கும் துணைவியார், உற்றார், உறவினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**இவ்வண்ணம் கிரியா ஞானசோதி**
**சிவகணேச சாமிநாதக்குருக்கள்**
**குடும்பத்தவர்கள்**

# அம்மான்......

அம்மான் அம்மான் என்று ஆசையாய் அழைத்திட
ஆனந்தமாய் கதைகள் பேசுவீரே
அன்பின் சிகரமாய் எமக்கெல்லாம் நீர்
ஆயிரம் உதவிகள் செய்தீரே

உற்றார் உறவுக்குள் உம்மைப்போல்
உத்தமரை இனி எங்குதான் தேடுவோம்
உலகத்தார் மெச்சும்படி ஊரார் போற்றும்படி
உவகையுடன் வாழ்ந்திட்ட உத்தமரே

கண் காணா தேசத்தில் காலன் உம்மை
கடு வேகத்தில் அழைத்ததேனோ?
காத்திருக்கும் உறவுகள் நாம் இங்கு
கண்கலங்கி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**விஜயன், ரூபி, பிள்ளைகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினை தீர்க்கும் வித்தகன் விசவத்தனையான் வீற்றிருக்கும் பண்ணாகம் பதியில் வாழ்ந்த குலசேகரம்பிள்ளை தம்பதிகளின் குலக்கொழுந்து உறவுகளின் உயிர், உற்றவரின் தம்பியண்ணை திரு.யோகநாதன் அவர்களுக்கு!**

சோதியாய், ஆதியாய், பாதியாய், நிற்பவனே!
வாதியாய் நாம் கேட்கின்றோம் நீதியோ நீ பாதியிலே பறிப்பது?
உறவெல்லாம் உயரணும் ஊர் எல்லாம் சிறக்கணும் - என்று
உறக்கமின்றி உழைத்த உத்தமனை உனதாக்கி கொண்டாய்
ஆண்டவா! அடுக்குமா உனக்கு இந்த நீதி

ஊர் எல்லாம் துக்கதினம் இன்று
உறவெல்லாம் உன்பிரிவால் துயரம்
வாழ்க்கையில் வெற்றிகொள்ளும் காலம் தனில்
வாழ்விழந்து போவது முறையோ
கொட்டி விட்ட நெருப்பில் புழுவாய்
கட்டி அழும் உறவுகளை விட்டு விட்டு
போவதுதான் முறையோ!
இது என்ன விதியின் முடிவோ!
அல்லது சதியோ மறையின் ?

குழந்தையின் உள்ளம் கொண்டு
குதூகலம் பொங்கும் பேச்சால்
விருந்தினை அழைத்தழைத்து
விருப்புடன் உறவு கொண்டு
குலவியே மனைவியோடு
குடும்பமாய் இருந்து வாழ்ந்து
உற்ற நற்பண்பினாலே
உறவினைப் போன்று வாழ்ந்து
ஒரு குலம் நம் மக்கள் என்ற
உண்மையை உணர்த்தி வாழ்ந்த
அண்ணனே! உம் நினைவு
அகலுமா எம்மை விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்கங்கள் அற்று காலத்தை வென்று வாழ்ந்து
முதுமையை காணமுன்னம்
முடிந்ததோ வாழ்க்கை
இல்லவே இல்லை இல்லை
வாழ்ந்த நற்காலமெல்லாம்
வந்து வந்து நினைவு காட்டி
தோன்றுதே மனத்துள் உந்தன்
உருவமும் செயலும்
என்றுமே அழியாதையா
எம்முடன் வாழ்ந்த காலம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுமென நம்பும் நாம்
தெய்வமே! அன்னாரின் பிரிவால் அல்லற்படாமல்
வையத்து வாழ்வாரைக் காத்தே அருள்வாய்

அன்னாரின் ஆத்மா இறைவனடி சேரவும் இறைவனை வேண்டுகின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முத்தழகன் வாசுதேவலிங்கம்

## ஜேர்மன் மண்ணில் நினைவில் நீங்காதவர் யோகநாதன் ...

*பண்ணாகத்தில் குலசேகரம்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனாக பிறந்தார் அமரர் யோகநாதன் சிறுவயதில் திறமைமிகு கல்வியை கற்று மேல் நிலைக்கல்வியை யாழ்ப்பாணத்தில் கற்றார். நல்ல இரக்ககுணம் படைத்த இவர் ஊரில் பல பொதுசேவை நிறுவனங்களில் தனது பங்களிப்பைச் செய்தார். பெரியவர்களிடம் மிகுந்த மரியாதை கொடுத்து தம்பி, அண்ணா என அழைப்பார். இவர் அமைதி நிறைந்தவர். யாரையும் மனம் நோகும்படி கதைக்கமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஜேர்மனியில் 1987ம் ஆண்டு காலடிவைத்து தன் வெளிநாட்டு வாழ்க்கையை ஆரம்பித்த இவர் தனது சகோதரங்களையும் இங்கு அழைத்து வாழ்வமைத்து கொடுத்தார். அதே காலத்தில் புதிதாக ஜேர்மனிக்கு வந்த தன் உறவுகளையும் நண்பர்களையும் தம்மிடம் அழைத்து தமக்கே அளவான அந்த சிறிய வீட்டில் பலரை தங்கவைத்து தமது சிரமத்தை பாராது பாதுகாப்பாக ஒரு அன்னைபோல வித விதமான உணவு சமைத்து வழங்குவார். வரும் வழியில் எதையும் சரியாக சாப்பிட்டிருக்க மாட்டீர்கள் நன்றாக சாப்பிடுங்கள் என அன்பு பாராட்டுவார். இங்கு தங்கியிருந்தவர்கள் எதை செய்தாலும் முகம் சுழிக்காமல் தம்மால் முடிந்த ஆறுதல் கொடுத்து அவர்கள் உரிய இடங்களுக்கு செல்லும் வரை தம்மிடம் தங்கவைத்தார். இங்கு ஜேர்மனியில் இவரை யோகண்ணை என பலர் அழைப்பார்கள். யாரையும் தன்வசம் ஈர்க்கும் அன்பு கொண்ட இவரது இழப்பு எமக்கெல்லாம் பெரும் இழப்பாகும். தன்னலம் பேணாது மற்றவர்களுக்காக வாழ்ந்தார் என்பது இவரது சிறப்பாகும்.

இவர் 1995இல் தனது மனைவி கலாவாணியுடன் வாழ்ந்த காலத்திலும் இருவரும் உறவுகளைப்பேணுவதில் இருவரும் ஒருவருக்கு மற்றவர் நிகராக நல்லதம்பதிகளாக வாழ்ந்து வந்தார். தனது மனைவியை மிகவும் நேசித்தார். அவரின் தேவைகள் அறிந்து செய்வதும் சீண்டி விளையாடுவதுமாக இருப்பார். தனது மனைவியை அம்மா என்றே அன்புடன் அழைப்பார். இவர் பணத்தை பெரிதென நினைக்காது அன்பைப் பெரிதாக நினைத்தார்.

இவர் 2006ம் ஆண்டு ஜேர்மனியில் பண்ணாகம் இணையம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து அங்கத்தவராக இருந்து வந்தார். இவர் பண்ணாகம் இணையத்தால் 2012ம் ஆண்டு வெளியிட்ட நாட்காட்டியை வெளியிட்டு முதல் பிரதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டார். இவரது இழப்பு இவரது குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் பேரிடியாகியது. பறவைகள் தங்கும் ஆலமரமாக நின்றவர் சரிந்துவிட்டார். இதையாராலும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அவர் மறைந்தாலும் அவரின் நினைவு அனைவரது மனதிலும் நிலையாக இருக்கும்.

நினைவில் நீங்காத அமரர் யோகநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாமும் வழக்கம்பரை முத்துமாரி அம்பாளையும், விசவத்தனை முருகனையும் இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**பண்ணாகம் மக்கள் ஜேர்மனி,**

**பண்ணாகம் இணையத்தள நிர்வாகம் ஜேர்மனி,**

**www.pannagam.com 2014 Germany.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

அறிமுகமில்லாத ஐரோப்பா
அன்பாய் எம்மை யார் ஏற்பார்
அன்று நின்றோம் திகைப்பா
A அப்பு அண்ணை அனுப்புவார்
தம்பி அண்ணை ஏற்பாரென்று
தம்பியண்ணையை நம்பியே
விமானத் தும்பியில் ஏறினோம்
சமையல் கலை தெரியாமல்
பிட்டு அவிக்கிறேன் என்று
பில்டரையும் சேர்த்து அவித்து
வீடெல்லாம் புகையானதை
Aபின்பு காணும் போதெல்லாம்
சொல்லிச் சொல்லி நகையாடுவார்
விசவத்தனையான் வீதியில்
கறுவல்தம்பியும் தம்பியண்ணையும்
கைப்பந்து ஆடியதை - ஊரில்
வாய்பிளந்து பார்த்தவர் எத்தனை
கந்தசஷ்டி கடைசி நாளில்
A கணத்த சூரனுக்கு கொம்பு கொடுத்து
சூரனை வீரனாய் தூக்கியாடியது
விழிகளில் விம்பங்களாய் விரிகின்றது
வந்த ஊர் உறவுகளுக்கு
வாஞ்சையோடு அடைக்கலம் தந்தவர்
விசவத்தனையானிடம் அடைக்கலமானார்

**அன்னாரின் ஆத்மா அமைதியுற அனைவரும் பிரார்த்திப்போம்.**

நீங்காத நினைவுகளுடன்

**சுவிஸ் வாழ் பண்ணாக மக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூவும்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாஹன்
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திருமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்

### கலிவெண்பா

**திருச்சிற்றம்பலம்**

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க ! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்!
எண்ணிறந் தெல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்!
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்ஆகிப் பூடாய் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச
செல்லாதுஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா வேதங்கள்
ஐயா, வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பா யருள்தருள்வாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் லஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே
பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

(சிவபுராணம் முற்றிற்று)

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

# கந்தர் சஷ்டி கவசம்

## *திருப்பரங்குன்றுறை தீரன்*

## *காப்பு*

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## *நேரிசை வெண்பா*

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## நூல்

### நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவேன் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரஹுண நிறிநிற நிறென
வசர ஹுணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுத் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டுகுடகு டிகுடிகு டங்கு டிங்குது


noolaham.org | aavanaham.org

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குளி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
மு ன்கை யிரண்டும் முரண்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாபம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா சஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் நீள்முடி மண்டையும்
பாவகை ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
ஆடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிட வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எரியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே! ஐசலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
ஆரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
அமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரசஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் செய்தே இருப்பினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந் துணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமுத தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

*(திருச்சிற்றம்பலம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பாக்கள்



மலர்வு28.1.1952 மறைவு 01.9.2014

அறிமுகமில்லா ஐரோப்பா
அன்பாய் நம்மை யார் ஏற்ப்பா
அன்று நின்றோம் திகைப்பா
அன்னையாக அரவணைத்த அண்ணையே!
தனியாக தவிக்க விட்டு போனதெங்கே
நம்பியிருந்தோம் நாமெல்லாம்
நமக்கு துணையாக நாளெல்லாமிருப்பீர்
தேம்பி எம்மை அழ வைத்து
தும்பியாக பறந்தது எங்கே
சிரிப்பு குன்றாத முகம் எங்கே
சிங்கார நடையழகு எங்கே
பனி போன்ற குணம் எங்கே
கனி போன்ற மனம் எங்கே
உறவுகளை காத்த சிறகு எங்கே
ஊரவரை அனைத்த கரம் எங்கே
கனத்த சூரனை காவியாடிய தோள் எங்கே
காணியில் ஒற்றை விதை விதைத்து
ஒன்பதாக்கிய வித்தை எங்கே
தேர் மேடையில் ஊர் நண்பர்களோடு
கூடி மகிழ்ந்த பொழுதுகள் எங்கே
தீயவை நினையா மனதை
தீய வழி செல்லா பாதத்தை
தீய மொழி பேச மகனை
தீ தின்னப்போகுதே
அன்பின் திருவுவை
பண்பின் விளை நிலத்திதை
அந்நிய மண்ணில் தொலைத்தோம்
ஐயோ எங்கள் கவலையை
எங்கே நாம் புதைப்போம்
அண்ணாவின் ஆன்மா அமைதியுற
ஆண்டவனை அனைவரும் பிரார்த்திப்போம்

ஆறாத பிரிவுத்துயரில்
சுவிஸ் வாழ் பண்ணாக மக்கள்

05.9.2014



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிப் பூக்கள்



## அமரர்.திரு குலசேகரம்பிள்ளை யோகநாதன் (தம்பி)

**மண்ணில் 28.1.1952** **விண்ணில் 1.9.2014**

இவர் யாழ்-பண்ணாகத்தில் 1952 இல் குலசேகரம்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனாக பிறந்தார் இவர் ஆறு சகோதரிகளையும் ஒரு சகோதரரையும் தன் உடன்பிறப்பாக கொண்டார். சிறுவயதில் திறமைமிகு கல்வியை கற்று மேல்நிலைக்கல்வியை யாழ்ப்பாணத்தில் கற்றார். நல்ல இரக்க குணம்படைத்த இவர் ஊரில் பல பொதுசேவை நிறுவனங்களில் தனது பங்களிப்பை செய்தார். தனது தந்தையார் செய்து வந்த முதலுதவி சிகிச்சையை அவரின் பின் இவர் ஊரவரின் நன்மைகருதி ஆற்றிவந்தது நாம் அறிந்தாகும். தன்வயதிலும் இளையவர்கலைக் கண்டால் அன்பு தழுவ உச்சியில் முத்தமிட்டு என்னைப் பெத்தவரே என செல்லமாக அழைப்பார். ஆதனால் மக்கள் இவரை பெத்தர் என்று செல்லமாக அழைப்பர் இவரில் இளையோர் எல்லோரும் மிகுந்த மரியாதை கொடுத்து தம்பி அண்ணா என அழைப்பர் இவர் அமைதி நிறைந்தவர் யாரையும் மனம் நோகும்படியாக கதைக்கமாட்டார்.

இவர் யேர்மனியில் 1986ம் ஆண்டு காலடிவைத்து தன் வெளிநாட்டு வாழ்க்கையை ஆரம்பித்த இவர் தனது சகோதரங்களையும் இங்கு அழைத்து வாழ்வமைத்து கொடுத்தார். அப்போதய காலத்தில் யேர்மனிக்கு வந்த தன் உறவுகளையும் நண்பர்களையும் தம்மிடம் அழைத்து தம்மால் முடிந்த அறுதல் கொடுத்து அவர்களை உரிய இடங்களுக்கு அனுப்பிவைத்தார். இங்கு யேர்மனியில் இவரை யோகண்ணை என பலர் அழைப்பார்கள் யாரையும் தன்வசம் ஈர்க்கும் அன்பு கொண்ட இவரது இழப்பு எமக் கெல்லாம் பெரும் இழப்பாகும். தன்னலம் பேணாது மற்றவர்களுக்காக வாழ்ந்தார் என்பது இவரது சிறப்பாகும். இவர் 2006ம் ஆண்டு பண்ணாகம் இணையம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து எப்படி நடக்கிறது என அறியும் ஆர்வம் மிக்கவர் இவர் பண்ணாகம் இணையத்தால் 2012ம் ஆண்டு வெளியிட்ட நாட்காட்டியை வெளியிட்டு முதல்பிரதியை பெற்றுக்கொண்டர். இவரது இழப்பு இவரது குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் பேரிடியாகியது. பறவைகள் தங்கும் ஆலமரமாக நின்றவர் சரிந்துவிட்டார். இதையாராலும் ஈடு செய்யமுடியாத ஒன்றாகும்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு பண்ணாகம் இணையம் தமது கண்ணீர அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

அன்னாரின் ஆத்மசாந்திக்கா எமது இதயம் வடிக்கும் கண்ணீரப் பூக்களை உங்கள் பாதக்கமலங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அன்னாரின் பிரிவால் துயரப்படும்
பண்ணாகம் இணையத்தள நிர்வாகம் ஆசிரியர் குடும்பத்தினர்
www.pannagam.com 05.9.2014 Germany


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்



## அமரர்.திரு குலசேகரம்பிள்ளை யோகநாதன்

**தாயின் மடியில் 28.1.1952** **மண்ணின் பிடியில் 1.9.2014**

தனக்காக வாழாது எங்களுக்காக வாழ்ந்த தங்கம் இவர் எங்களின் குடும்பம் தழைக்க தன் ஆவிவழங்கிய தெய்வம் இவரின் திடீர் இழப்பு எங்களை உலுக்கிவிட்டது. நாம் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம். ஏன் இப்படி எங்களைத் தவிக்கவிட்டு சென்றீர்கள் பாச மகனாக, நல்ல பாசமிகு தம்பியாக அண்ணனாக, பொறுப்பான கணவனாக, நல் மருமகனாக, தோழமைமிகு மச்சானாக செல்லம் குறையா மாமாவாக, பெரியப்பாவாக, ,அன்பு பேரனாக எங்கும் காணா எமக்கு கிடைத்த இனிய உறவே!! உங்களை இனி நாம் எங்கு காண்போம்.

ஏன் இப்படி? ஏன் இப்படி? எம்மை மறந்து தவிக்கவிட்டு சென்றீர்கள் உங்கள் பலத்தில் தானே நாம் வாழ்ந்தோம். தற்போது பலமிழந்து பரிதவிக்கின்றோம். அன்னையைத் தன் கண்ணாக நினைத்தவர் கண்மூடும்வேளையில் என்ன நினைத்தீர்கள்.

அண்ணா!! நீங்கள் எமை உங்கள் பிள்ளைகள் என்றே வளர்த்தீர்கள் உரியமுறையில் வாழ்வு பெற்றுத்தந்தீர்கள் உங்கள் பெயர் சொல்லி நாம் வாழ உங்களைக் காலன் ஏன் இப்படி அழைத்தான். தாங்க முடியவில்லை தாங்க முடியவில்லை.

எம் அன்பு மச்சானே எமை உடன்பிறந்தவர் போல் உள்ளங்கையில் தாங்கினீர்கள் உங்கள் இழப்பை நாம் எப்படி தாங்குவோம் ஏன் எம்மை மறந்து சென்றீர்கள்.

எமக்கு கிடைத்த பெரும் பொக்கிசம் எம் அம்மான் கட்டிக் கரும்பான மாமாவே உங்களிடம் நாம் கடவுளைக் கண்டோம். எம்மைக் கண்டவுடன் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்து எம் முகமலரச் செய்வீர்கள் எங்களுடன் குறும்புகள் செய்து குறுங்கதைகள் கூறி பட்டப்பெயர்வைத்து பாசமாக அழைத்து எம்மை மகிழ்வித்த மாமாவே! அம்மானே! இனி உங்களை எப்போ காண்போம் எம்கதை கூற உங்களைப்போல் ஒரு நல்லமனிதரை நாம் எங்கு தேடுவோம்.... எங்கே தேடுவோம்....

உங்கள் இழப்பை எத்தனை வருடங்கள் சென்றாலும் தாங்கமுடியாது. ஆற்றமுடியாது. உங்களுக்கு எமது இதயம் வடிக்கும் கண்ணீர்ப் பூக்களை உங்கள் பாதக்கமலங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவைத்தாங்கமுடியாமல் தவிக்கும்
தாய்,மனைவி,சகோதர,சகோதரிகள்,மச்சான்மார்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.
05.9.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

திரு. குலசேகரம்பிள்ளை யோகநாதன்

தோற்றம்:- 28-01-1952 மறைவு:- 01-09-2014



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி லூடென்சைட் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. குலசேகரம்பிள்ளை யோகநாதன் அன்பிற்கு உதாரணமாய் வாழ்ந்து எங்கள் உள்ளம் புகுந்த நண்பர் திடீர் மறைவு எங்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

சிறியவர், பெரியவர் என்ற ஏற்றத்தாழ்வின்றி அனைவரையும் அரவணைத்து இனிமையாகப் பேசும் சுபாவம் கொண்ட நண்பரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
அவர் பிரிவால் துயருறும் லூடென்சைட், அல்ற்ரேனா நகரில் வாழும் அன்பர்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகள்

❖ நீ பேசுவதற்கு முன் சிந்தனை செய்.

❖ பொறுமையென்ற திறமையிருந்தால் தன்னம்பிக்கை வெல்லும்.

❖ உன்னை நீயே திருத்திக்கொள். அப்படியானால் நீ சாதிக்கப் பிறந்தவன் (ள்).

❖ நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உனது கால்களால் நடந்து செல். மற்றவர் முதுகில் ஏறிச் செல்லாதே!

❖ உலகத்தை நேசிக்கத் கற்றுக்கொள். ஆனால் ஒருவரையும் ஆழமாக நம்பிவிடாதே.

❖ பாதையை தொலைத்துவிட்டு பயணம் போவார்கள் இலட்சியம் இல்லாதவர்கள்.

❖ வாழ்வின் இனிமையைச் சுவைப்பதற்கு கடந்த காலத்தை மறக்கும் சக்தி இருக்க வேண்டும்.

❖ மற்றவர்களுக்கு தேவைப்படுபவராக நீங்கள் வாழ்ந்து வரவேண்டும். யாருடைய வாழ்க்கையையும் வேதனை நிறைந்ததாக மாற்றும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்.

❖ கடின உழைப்பு, சோர்வில்லாத மனம், நல்ல விதி இவை மூன்றுமே எந்தவொரு மனிதனதும் வெற்றிக்கும் வேண்டியவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்தில் வாழ்க்கை

உலகில் உள்ள **உயிர்** மூன்றெழுத்து
உயிரை இயக்கும் **சக்தி** மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் **அன்னை** மூன்றெழுத்து
அன்னை காட்டும் **அன்பு** மூன்றெழுத்து
அன்பை உயிர்த்தும் **அறிவு** மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் **பள்ளி** மூன்றெழுத்து
பள்ளியிற் கற்கும் **கல்வி** மூன்றெழுத்து
பதவியை சிறப்பிக்கும் **இளமை** மூன்றெழுத்து
இளமை தரும் **மணம்** மூன்றெழுத்து
மணத்தால் **இணையும்** மனைவி மூன்றெழுத்து
மனைவியால் உருவாகும் **மழலை** மூன்றெழுத்து
மழலைக்குச் செலவாகும் **பணம்** மூன்றெழுத்து
பணத்தினை தேடும் **கைகள்** மூன்றெழுத்து
கைகள் சோரும் **முதுமை** மூன்றெழுத்து
முதுமையின் பின் **முடிவு** மூன்றெழுத்து
முடிவின் பின் தேவைப்படும் **பெட்டி** மூன்றெழுத்து
பிணம் எழுத்துச் செல்லும் **ஊர்தி** மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் இடம் **சுடலை** மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் **கொள்ளி** மூன்றெழுத்து
கொள்ளியில் எரிந்த **அஸ்தி** மூன்றெழுத்து
அஸ்தி கரையும் **கடல்** மூன்றெழுத்து.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது அன்புத் தெய்வம் அமரர். குலசேகரம்பிள்ளை யோகநாதன் அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அன்பு உறவுகள், அயலவர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எம்மனம் கனிந்த நன்றிகள்.

எங்கள் குடும்பத் தலைவனைப் பிரிந்து நாங்கள் ஆறாத துயரடைந்த வேளையில் எங்கள் வீட்டிற்கு வருகைதந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உணவு தந்தவர்களுக்கும், பலவகையிலும் உதவி புரிந்தவர்களுக்கும், அன்னாரின் பூதவுடலுக்கு பார்வையாளர் மண்டபத்தில் இருந்த நேரத்தில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலமும், அஞ்சல் மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு
மனைவி, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், மக்கள், மருமக்கள்.

01.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org